REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: புரட்டாசி 1௳ செவ்வாய் (17—9—57) ★ ★ வெளியூர்: புரட்டாசி 2௳ புதன் (18—9—57) [இதழ் 81

டில்லி தேவனின் பெருங்கருணை!

புதுடில்லி, செப். 15—

கைத்தறி நெசவாளருக்கான குடியிருப்புக் காலனிகள் அமைப்பது என்ற திட்டப்படி, தமிழ்நாட்டில் மேலும் ஒரு காலனி அமைக்க டெல்லி தேவன் கருணை காட்டி விட்டானும்!

கூட்டுறவு முறையில் அமையும் இந்தக் காலனியில், ஒவ்வொன்றும், ரூ. 3,600 பெறுமான வீடுகள் கட்டப்படும் என்றும் இதில் மூன்றில் ஒரு பங்கு மானியமாகத் தரப்படும் என்றும், எஞ்சிய தொகை 25 ஆண்டுக் காலத் தவணையில் கடனாகத் தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக சென்னை சர்க்காருக்கு, டெல்லி சிறிது முன்பணமாகக் கடனும் தந்துவிட்டதாகக் கூறப்படுகிறது.

தென்னாட்டுப் பட்டாசுத் தொழிலுக்கும் ஆபத்தா?

15 ஆண்டுகளாக நிகழாத விபத்து இப்பொழுது ஏற்படுவானேன்?

இரயில்வேயில் நடந்த விபத்துக்கு யார் பொறுப்பாளி?

பொதுச்செயலாளர் எழுப்பும் கேள்விகள்

"பதினைந்து ஆண்டுக்காலமாக நாட்டின் பல பகுதிகளுக்கும் இரயில் மூலம் பத்திரமாகப் போய்க்கொண்டிருந்த பட்டாசு வெடிகள், இந்த ஆண்டுமட்டும் ஏன் தீப்பிடிக்க வேண்டும்? இதற்குக் காரணமென்ன?

"இரயில்வேயிலுள்ள சிப்பந்திகளில் ஒருவன், வண்டியில் பட்டாசு போகிறது என்பதை அறிந்தவுடன், 'அதில் நாமும்தான் கொஞ்சம் எடுத்துக்கொள்ளுவோமே' என்று நினைத்து, அவசர அவசரமாகத் திருடியிருப்பான்; அப்போது பார்சல் கட்டுகள் உடைபட்டு, வெடிக் கட்டுகள் வெளியில் நீட்டிக்கொண்டிருந்திருக்கும்; பெட்டிகளை ஒன்றேடொன்று தூக்கிப் போடும்போது ஒன்றுக்கொன்று மோதி தீப்பற்றியிருக்குமானால் அது யாருடைய குற்றம்? இரயில்வே இலாகாவின் குற்றமா? பட்டாசு அனுப்புகிறவர்களுடைய குற்றமா?

"இதே பட்டாசுத் தொழில் வடநாட்டிலிருக்குமானால் இந்நேரம் அவர்கள் சும்மாயிருப்பார்களா? எத்தனை எம். பி.-க்கள் பார்லிமெண்டிலே கூச்சலிடுவர்? பண்டித நேருவை அவர்கள் குடைந்துவிடமாட்டார்களா?"

—இவ்வாறு, தி.மு.க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சிவகாசி தி. மு. கழகச் சார்பில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் கேள்விகள் எழுப்பிப் பேசினர்.

இக்கூட்டம், 7—9—57-ல், சிவகாசி சிவன்கோயில் முன்பு தோழர் இரா. ச. குப்புசாமி தலைமையில் நடைபெற்றது.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"ஊசி முதல் பொத்தான் வரை—பெண்கள் தலைக்கு வைத்துக்கொள்ளும் கொண்டை ஊசி ரிப்பன் முதல் எல்லா சாமான்களும் வடநாட்டிலிருந்துதான் இங்கே வருகின்றன. பட்டாசும், தீப்பெட்டியும், பழைய சாக்கும் தான் நம் நாட்டிலிருந்து வடக்கே போய்க்கொண்டிருந்தன. இப்பொழுது அவற்றிற்கும் ஆபத்து வந்துவிட்டது.

"எங்கேயோ பட்டாசு தீப்பிடித்து எரிந்தால் அதற்காக, 'எந்த இரயில் நிலயத்தில் பட்டாசு இருந்தாலும் அவைகளை அங்கேயே முடக்கி வைத்துவிட வேண்டும்; அவற்றை ஏற்றிச் செல்ல வேண்டாம் என இரயில்வேயிக்குக் கட்டளையிட்டிருக்கிறது, அரசாங்கம்!

"டில்லிக்குப் போய்க் கொஞ்சுவதும், கெஞ்சுவதும், டில்லியில் உள்ளவர்கள் சொல்வதை சரி என்று கேட்டுக்கொண்டுபேசாமல் வந்துவிடுவதும்தான், இந்த நாட்டு ஆளும் கட்சியின் போக்காக இருந்துவருகிறது. பட்டாசுத் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலை மேலும் நீடிக்குமானல், இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர் குடும்பங்கள் வறுமையில் வாடி, அல்லலுக்குள்ளாக நேரும். அரசாங்கம் உடனடியாக இதற்கு ஆவன செய்ய வேண்டும்.

"புதிய நாணய முறை வந்தாலும், புதிய காசுகள் சரிவரப் புழக்கத்துக்கு வாராத காரணத்தாலும், தீப்பெட்டிகள் ஏராளமாக விற்பனையாகாமல் தங்கியிருக்கின்றன. இதன் விளைவாக சிவகாசியிலுள்ள தொழிற்சாலைகளில் பாதி மூடப்பட்டுவிட்டன. தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் இது குறித்து மத்திய நிதியமைச்சர் டி.டி. கிருஷ்ணமாச்சாரியிடம் முறையிட்டிருக்கிறார்கள்.

'முப்பது தீக்குச்சிகள் அடங்கிய பெட்டியை 3 புதுக் காசுக்கு விற்கிறோம்; அல்லது 50 குச்சிகளடங்கிய பெட்டியை 50 காசு விலைக்கு விற்கிறோம்' என்று உற்பத்தியாளர்கள் அமைச்சரிடம் அனுமதி கேட்டனர். அதற்கு, அமைச்சர் 'விம்கோ' உற்பத்தி சாலைக்கு (அதாவது இயந்திர மூலம் உற்பத்தி செய்யப்படும் தீப்பெட்டித் தொழிற்சாலைக்கு)ப் பாதகம் ஏற்படா வண்ணம் ஏதாவது வழி இருந்தால் சொல்லுங்கள்' என்று கூறிவிட்டாராம்!

"'விம்கோ' தொழிற்சாலை, 60 குச்சிகளடங்கிய பெட்டியை 6 காசு விலைக்குவிற்கிறது; 40 குச்சிகளடங்கிய முக்காலணுவிற்கு விற்பனையாகிறது; ஆகையால் 60 குச்சிகளடங்கிய 'விம்கோ' பெட்டிகள்தான் மிகவும் கூடுதலாக—முந்திய விற்பனையைக் காட்டிலும் 4 மடங்கு அதிகமாக விற்பனையாகின்றன; இயந்திரத்தின் மூலம் இயங்கும் தீப்பெட்டித் தொழில் பாதி உற்பத்தியும், குடிசைத் தொழில் மூலம் பாதி உற்பத்தியும் செய்தால் இந்த மந்த நிலை ஏற்படாது' என்று உற்பத்தியாளர்கள் அமைச்சரிடம் யோசனை கூறியிருக்கிறார்கள்; அதுபற்றி யோசிப்பதாக அமைச்சர் கூறிவிட்டாராம்!

"நாம் கொடுக்கும் வரிப் பணத்தை வாங்கிக்கொண்டு, வடநாட்டு சர்க்கார் நம்மை இந்த இழிநிலையில் வைத்திருக்கிறது. நாம் எதற்கெடுத்தாலும், காவடியெடுத்து அவர்களிடம் கெஞ்சிக் கேட்டு, நம் உரிமைகளைப்பெற வேண்டியுள்ளது; எனவேதான், இந்த நிலையைப் போக்க, தென்னாடு சுதந்தரம்பெற்று இன்பத் திராவிடமாக மலரவேண்டுமென திராவிட முன்னேற்றக் கழகத்தாராகிய நாங்கள் கூறுகிறோம்."

ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பட்டாசுகள் தேக்கம்!

சிவகாசி, செப். 17—

வெடி மருந்துக்களை இரயிலில் ஏற்றிச் செல்லக் கூடாது என்று இந்திய அரசாங்கம் தடை விதித்திருப்பதால் ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள பட்டாசுகள் பல புகைவண்டி நிலயங்களிலும், பட்டாசுத் தொழிற்சாலைகளிலும் தேங்கியுள்ளதாக சிவகாசியில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசயவாடாவில்......

சிவகாசியிலிருந்து அனுப்பப்பட்ட பட்டாசு வெடிகள் அடங்கிய 15 வாகன்கள் இரயில்வே நிறுவன உத்தரவின் பேரில் விசயவாடா புகைவண்டி நிலயத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாம்.

இதே போன்று விசயவாடா வட்டாரத்தில் எல்லா புகைவண்டி நிலயங்களிலும் பட்டாசு வாகன்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாம்.

விளையாட்டுத் துப்பாக்கிக்கான வெடி மருந்து

தயாரிப்பதற்கு டெல்லி தடை விதிக்கிறது

புதுடில்லி, செப். 16—

விளையாட்டுத் துப்பாக்கிக்கான 'கேப்' என்ற வெடிமருந்து தயாரிப்பதை உடனடியாக நிறுத்தி விடுவது என்று, மாநில முதன் மந்திரிகள் மாநாடு, உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் தலைமையில் நடைபெற்றபோது ஒருமனதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்.

தீபாவளியை முன்னிட்டு இப்போது விதிக்கப்படும் இந்தத் தடை, இதர பட்டாசுகளைப் பாதிக்காது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே இந்தக் 'கேப்'புகள் உற்பத்தி செய்து வைத்திருந்தவர்களிடமிருந்து அவை கைப்பற்றப்பட்டுவிட்டன என்றும் கூறப்படுகிறது.

தமிழ்நாட்டிலிருந்து மேலும் மூன்று கிராமங்கள்

ஆந்திராவுக்குத் தரச் சிபாரிசாம்!

படாஸ்கர், துணை அறிக்கை தந்துள்ளாராம்

ஐதராபாத், செப். 16—

தமிழ்நாட்டில் கிருஷ்ணகிரி தாலுகாவிலிருந்து மேலும் மூன்று கிராமங்களை, ஆந்திராவிற்குத் தந்துவிட வேண்டும் என்று, படாஸ்கர், ஒரு உப அறிக்கையில் சிபாரிசு செய்திருக்கிறாராம்.

படாஸ்கரின் தீர்ப்பு பற்றி மீண்டும் புனராலோசனை செய்ய வேண்டுமென ஆந்திர சர்க்கார் கோரியதின்பேரிலேயே, அவர் மீண்டும் ஒரு உப அறிக்கை தந்துள்ளாராம்.

இந்த அறிக்கையிலும், ஒசூரை ஆந்திரத்துடன் சேர்க்க அவர் சிபாரிசு செய்யாதது, ஆந்திர சர்க்காருக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்திருப்பதாகவும், மேலும் நான்கு கிராமங்களை ஆந்திராவுக்குத் தந்தால் ஒசூருடன் தொடர்ச்சி கிட்டிவிடும் என்றும் ஆந்திரசர்க்கார் கருதுவதாகவும் கூறப்படுகிறது.

ஆந்திர சர்க்கார், கிருஷ்ணகிரி வட்டாரத்திலிருந்து 10 கிராமங்கள் வேண்டுமெனக் கோரியிருந்தனராம்; படாஸ்கர் மூன்று கிராமங்களைத் தர மட்டுமே சம்மதித்திருக்கிறாராம்.

ரூ. 21 கோடி சிக்கனம்!

புதுடில்லி, செப். 16—

'இந்திய அரசாங்கத்தின் பல்வேறு அமைச்சர் இலாகாக்களில் ஏற்படுத்தப்பட்ட சிக்கனத்தின் விளைவாக மொத்தம் ரூ. 21 கோடி இந்த ஆண்டு செலவில் குறையக்கூடும்' என்று பண்டித நேரு மக்கள் சபையில் அறிவித்துள்ளார்.

ரூ. 1,000 கோடி பற்றுக்குறையாம்!

புதுடில்லி, செப். 14—

"திட்டத்தை ரூ. 4,800 கோடி அளவிற்குக் குறைத்தும், திருத்தியும் அமைத்தாலும்கூட, வெளியிலிருந்து கிடைக்கக்கூடிய உதவி நீங்கலாக ரூ. 1,000 கோடி அளவிற்குப் பற்றுக்குறை உள்ளது" என்று இந்திய நிதி அமைச்சர் டி. டி. கே. அபிவிருத்திக் குழுவில் தெரிவித்துள்ளார்.

'சேலை, வேட்டி உற்பத்தியைக் கைத்தறிக்கே ஒதுக்கவேண்டும்'

தொடர்ந்து கிளர்ச்சி செய்யுங்கள் என்கிறார் ஆச்சாரியார்

"சேலை, வேட்டி உற்பத்தியைக் கைத்தறிக்கே ஒதுக்கித் தரவேண்டும் என்ற போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துங்கள். இது நடைபெற்றால், கைத்தறித் தொழிலை நம்பியுள்ள கோடிக்கணக்கான மக்கள் சந்தோஷப்பட முடியும்.

"சர்க்கார் தரும் உபகாரத் தொகையை நம்பிக்கொண்டிராதீர்கள்; கைத்தறித் தொழிலின் பிரச்சினையைத் தீர்க்க இந்த உபகாரத் தொகை உதவாது. உண்மையான உதவி என்னவெனில், மக்கள் கைத்தறி ஆடைகளையே அணியுமாறு செய்வதுதான்"

—என்று, திரு. இராசகோபாலாச்சாரியார் அவர்கள், ஆந்திர கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரான பிரகத கோட்டையா எம். எல். ஏ., தன்னைச் சந்தித்தபோது கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

தோழர் ஈ. வெ. கி. சம்பத்

நாளை காலை சென்னை வந்துசேருகிறார்

சென்னை, செப். 17—

டெல்லிப் பாராளுமன்றக் கூட்டங்களில் கலந்துகொண்ட தோழர் ஈ. வெ. கி. சம்பத் எம்.பி., நாளை காலை 8-30 மணி அளவில் சென்னை வந்துசேருகிறார்.

...த்தின் இலட்சியத்தினை முத... தலாகப் பாராளுமன்றத்தில் ...க்கிவிட்டுத் தாயகம் திரும்பும் ...களை இரயில... ...கக, சென்னை நகர தி.மு.க.தோழர்கள் துடித்துக்கொண்டிருக்கின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—9—57 செவ்வாய்

வளமார் திராவிடம் வாழ்க-வாழ்கவே!

திராவிடம்—நாம் வாழும் திருவிடம்.

திராவிடம் — தொழில் துறையில் தேய்ந்துகிடக்கிறது; தேம்பித் தேம்பி அழுது தவிக்கிறது.

திராவிடம் — அரசியல் துறையில் அடிமைப்பட்டுக் கிடக்கிறது. விடுபடும் வகை காணத் துடிதுடிக்கிறது.

திராவிடம் — இயற்கை வளம் நிரம்ப உள்ள நாடு; இருந்தாலும், தொழில்வளம் குன்றிக் கிடக்கின்றது.

திராவிடம்— எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே உரோம்—எகிப்து ஆகிய நாடுகளுடன் வாணிபம் செய்து வளத்துடன் வாழ்ந்திருந்த நாடு. இது, வரலாற்று உண்மையாகமட்டுமே இன்று இருந்துவருகிறது.

திராவிடம் — ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்தவரையும், கடலை அடக்கிக் கலம் செலுத்தினவரையும், திரைகடலோடித் திரவியம் திரட்டினவரையும் கொண்டிருந்த நாடு. அம்மங் காப்புகழ் மங்கிவிடாதவகையில் அத்தகு வீரமக்களைப் பெற்றுள்ள நாடு.

திராவிடம் — விலைமதிக்க ஒண்ணா மலைபடு பொருள்களை ஏராளமாக இன்றும் கொண்டிருக்கின்றது.

திராவிடம் — வீரவரலாற்றைத் தம் குருதியால் சமைத்துத் தந்துள்ள ஆற்றல் மறவர்களின் சந்ததியினரைப் பெருந்தொகையாகக் கொண்டு விளங்கிடும் நாடு.

திராவிடம்— இயற்கை வளங்களைக் கொண்டிருந்தும், ஆற்றல்மிக்கவர்களைக் குடிமக்களாகக் கொண்டிருந்தும், தொழில் துறையில் தேங்கிக் கிடப்பதும், அரசியல் துறையில் அடிமைப்பட்டுக் கிடப்பதும், நெஞ்சைத் துளைக்கும் சோகச் செய்திகளாகும்.

திராவிடம்—உரிமையுடன் இருந்து வந்ததை, தன்னலம் கருதி ஆங்கில ஏகாதிபத்தியம், பிற நிலப்பரப்புகளுடன் ஒன்றாகப் பிணைத்துவிட்டது.

திராவிடம்— இப்பிணைப்பு ஏற்படுத்தப்பட்ட நாள் தொட்டே, வலிவும் பொலிவும், புகழும் நலமும் இழக்கத் தொடங்கிவிட்டது.

திராவிடம் — தானப் பொருளாகக் கருதப்பட்டு, ஆங்கில ஏகாதிபத்தியத்தால் வடவர் ஏகாதிபத்தியத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

அவ்வாறு ஒப்படைக்கப்பட்ட நம்மரும் திராவிடத்தை, வடநாட்டின் சந்தையாக திட்டமிட்டுப் பயன்படுத்தி வருகிறது வடவர் ஏகாதிபத்தியம்.

அன்று ஆங்கில ஏகா[illegible] பத்தியம் செய்துவந்தத் திரு[illegible] பணி[illegible]துதான்—அதை [illegible] ன் இன்று வடவர் ஏகா[illegible]த்தியம் [illegible]தொடர்ந்து செ[illegible]ருகிறது.

அந்தனையால், சமயத்[illegible], மொழியால், கலையால், பண்பால், உணவால், உடையால், உறையுளால், பிற பழக்கவழக்கத்தால், வடநாட்டினும் திராவிடம் மாறுபட்டு இருந்தது — இருக்கிறது — எதிர்காலத்திலும் இருக்கும் என்பது நிச்சயம்.

ஏறத்தாழ இருநூறு ஆண்டுக்கால ஏகாதிபத்திய ஆட்சியால், திராவிடத்திற்கும் வடநாட்டிற்கும் இயல்பாக அமைந்துள்ளவேற்றுமைகளை களைந்து, பொதுமையை நிலைநாட்ட முடியவில்லை. அம்முயற்சியில் முழுத் தோல்வி கண்டும் இருக்கிறது அந்த ஏகாதிபத்தியம்.

வடக்கையும் திராவிடத்தையும் இணைக்க ஆங்கில ஏகாதிபத்தியம் உருவாக்கிய அமைப்புகளும், அவை மேற்கொண்ட பல முயற்சிகளும் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை.

அரசியல்துறை ஒன்றில் மட்டும்தான் ஏகாதிபத்தியம் வெற்றி பெற்றுள்ளது—அதுவும் துப்பாக்கிமுனையால்.

ஆங்கிலமொழி மூலம் அன்பு முறையில் ஏகாதிபத்தியம் மேற்கொண்ட இணைப்பு முயற்சி ஓரளவு பலனளித்தது. இருந்தாலும், அதுவும் நிலைபெற்றதாக இருக்கமுடியவில்லை.

உலக மொழியான ஆங்கிலம் செய்து பார்த்துத் தோற்றுப் போன இணைப்புப் பணியை, குறிப்பிட்ட பகுதி மக்களின் தாய்மொழியான இந்தி—அதிலும் திராவிட இன மொழிகளினும் பலமடங்குப் பின்தங்கிக் கிடக்கின்ற இந்தி—வெற்றிகரமாக முடிக்கும் என எதிர்பார்ப்பது ஏளனத்துக்குரியது—அவ்வாறு எதிர்பார்ப்பவர்களின் மொழி வெறியையும், அரசியல் ஆதிக்க வெறியையும் படம்பிடித்துக் காட்டுவதும் ஆகும்.

திராவிடத்தை மீட்கும் பணியில் நமது கழகம் ஈடுபட்டிருக்கிறது.

இது தேசிய எழுச்சி—விடுதலை முழக்கம்.

இவ்விடுதலை முழக்கத்தை நமது கழகம் சென்ற எட்டாண்டுக் காலமாக முழக்கி வந்திருக்கின்றது.

இவ்வெட்டாண்டுக் காலத்தில், நாம் பலரின் ஏளனத்திற்கும் ஏசலுக்கும் கண்டனத்துக்கும் ஆளாகிவந்திருக்கின்றோம்.

ஏளனம் நம்மை சிதைத்துவிடவில்லை; ஏசல் நம்மை சரித்துவிடவில்லை; கண்டனம் நம்மை கரைத்துவிடவில்லை. அதற்கு மாறாக, விரல் விட்டு எண்ணக்கூடிய சிலராக இருந்து உருவாக்கிய திருவிடத்தின் விடுதலைப் படை இன்று பல்கிப் பெருகி இருக்கிறது—பெருகிக் கொண்டே போகிறது.

பட்டிதொட்டிகள் எல்லாம் கிளைகள்; சிற்றூர் பேரூர்கள் எல்லாம் பெரும் பெரும் அமைப்புகள்; தலைநகரில் 'அறிவகம்' என்ற முறையில், நாளும் நாளும் நாம் வளர்ந்து கொண்டே போகிறோம்.

சிறிய வித்து—பெரிய மரம். இப்படி நமது கழகத்தின் வளர்ச்சி வளர்ந்து கொண்டே இருக்கிறது.

நமது முழக்கம் சட்டமன்றத்தில் கேட்கிறது—அதை நாடு ஆர்வத்தோடும், அளவுக்கு மிஞ்சின ஆவலோடும் செவிமடுக்கிறது. தாயக விடுதலைப் படை மேலும் மேலும் திரண்டவண்ணம் உள்ளது.

மக்கள்சபையில் நமது விடுதலைக் குரல் கிளம்புகிறது—அவ்வாறு கிளம்பும் குரல் தனிக் குரல்தான்—இருவரே இருவர்தான் அக்குரலை எழுப்புகின்றனர் — என்றாலும், அது இதுவரை மக்கள் சபையைப் பற்றிக்கொண்டிருந்த சிந்தனைப் போக்கையே வேறு பக்கத்தில் திருப்பிவிட்டிருக்கிறது என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது.

வடக்கு—தெற்கு என்று பேசத்தான் தெரியும் நமக்கு என எப்பொழுதும் ஏளனமாகப் பேசிக்கொண்டிருக்கும் காங்கிரசு அமைச்சர்கள்கூட, குட்டுப்படும்பொழுது 'வடக்கே வளமிருக்கிறது — தெற்கே வாட்டம் பெருகுகிறது' என்ற உண்மையைத் தங்களையும் அறியாமலே ஆத்திரத்தோடு வெளியிடுவதை நாம் அடிக்கடி கேட்டுத்தான் வருகிறோம்.

உண்மையை நீண்ட காலத்திற்கு மறைத்துவைக்க முடியாது என்ற படிப்பினையைத்தான் அமைச்சர்கள் கூற்று நமக்கெல்லாம் அறிவுறுத்துகிறது.

தெற்கு—தென்னாட்டு நலன் எனப் பேசப்படுவது—நாம் பேசும் திராவிடத்தின் மறுபதிப்பாகும்.

இவ்வாறு பலப் பலர் பேசி வருவது, நமது இலட்சிய உண்மையின் மருங்கே அவர்கள் மெள்ள மெள்ள நகர்ந்து வருகிறார்கள் என்பதைக் காட்டுவதாகும். எனவே, அவர்கள் 'வளமார் திராவிடம் வாழ்க—வாழ்கவே' எனக் குரல் எழுப்பி, அறப்போர்க் களம் புகுந்து, தாயகத்தை விடுவித்து மகிழும் நன்னாள் அதிக தொலைவில் இல்லை என்பதை நாம் நிச்சயித்துக் கொள்வோமாக.

நாட்டு மக்களும், மாற்றுக் கட்சியினரும் நம்முடன் இணையும் வகையில், இக்கிழமையை நமது கழகத்தவர்கள் தம்மரும் சொல்லாலும், தூயச் செயலாலும் பணியாற்றுவார்களாக.

'வளமார் திராவிடம் வாழ்க வாழ்கவே!'

'விசாரணையே வெறும் கண்துடைப்பு'

'அரசாங்கம் தவறான அடிப்படையில் விசாரணைக்கு ஏற்பாடு செய்துள்ளது'

'நீதிபதி முழுஅளவில் சுதந்தரமாகச் செயலாற்ற முடியவில்லை'

போலீஸ் அதிகாரிமீது குற்றச்சாட்டுகள்: விசாரணைபற்றி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்'

சென்னை, செப். 16—

சென்னை சட்டசபையில் போலீஸ் மானியக் கோரிக்கைமீது தோழர் க. அன்பழகன் அவர்கள் பேசுகையில், பெரிய போலீஸ் அதிகாரிகளைப் பற்றிக் கூறிய புகார்களை ஆராய அரசாங்கம் நீதிபதி திரு. பி. என். இராமசாமி அவர்களை நியமித்திருந்ததும், அவர் விசாரணை நடத்தி அரசாங்கத்திற்குக்கொடுத்த அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டதும் எத்தன்மையானது என்பதுபற்றி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இதழ் தீட்டியுள்ள தலையங்கத்தைத் தமிழாக்கித் தந்துள்ளோம் :—

நீதிபதி திரு. பி. என். இராமசாமி அவர்கள், போலீஸ் ஐ. ஜி.; மற்றும் வேறு சில பெரிய போலீஸ் அதிகாரிகளைப்பற்றிக் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரணை நடத்தியதில் வெளிப்பட்டுள்ள முக்கியமான உண்மைகளைவிட, இந்த வழக்கு, நீதித்துறைக்கும், நிர்வாகத்துறைக்கும் உள்ள தொடர்புப்பற்றி நன்கு புரிந்துகொள்ளுவதற்கு இதுவரை இல்லாத வாய்ப்பினைத் தந்துள்ளது.

சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் கூறிய புகார்களின் காரணமாகவும், போலீஸ் ஐ. ஜி. தன்னைப்பற்றி விசாரணை நடத்த வேண்டும் என்று முன்வந்ததும் தான் சென்னை அரசாங்கம் விசாரணைக்கு ஏற்பாடு செய்ததற்குக் காரணங்களாகும்.

விசாரணைக்கு ஏற்பாடு செய்ததைப்பற்றி எவரும் ஏதும் கூறுவதற்கில்லை; ஆனால், நீதித்துறைக்கு உட்பட்ட முழு அளவில் விசாரணை நடத்தாமல் விசாரணைக்கு ஏற்பாடு செய்வதில் பயன் இல்லை. நீதித்துறையில் பெரிய அதிகாரியாக உள்ள ஒரு தனி நபர் விசாரணை நடத்தியுள்ளார் என்பதற்காக இந்த விசாரணை நியாயமானது என்று எவரும் ஒப்புக்கொள்ள முடியாது.

விசாரணைக்கு ஏற்பாடு செய்த நிர்வாக அதிகாரம், ஆரம்பத்திலிருந்தே இந்த விசாரணை முக்கியமானது என்றும், எல்லாத் துறைகளையும் ஆராய்ந்து முழு உண்மையைக் கண்டறிய ஏற்பாடு செய்யப்பட்டது என்றும் தெளிவாக்கியிருந்திருக்க வேண்டும். நீதித்துறைக்கு உட்பட்ட எல்லா வழித்துறைகளையும் தடையின்றி கையாண்டு உண்மையைக் கண்டுபிடிக்க விசாரணை நடத்திய நீதிபதிக்கு வாய்ப்புகள் இருந்திருக்க வேண்டும். இந்த வழக்கில் வாதிகள், வாதங்கள், முறைகள் அனைத்தும் திரைமறைவில் நடத்தப்பட்டு 'மூடுபனி'யாக உள்ளது.

இந்த விசாரணையில் அரசாங்கம் எடுத்துக்கொண்ட பங்கென்ன; எவ்வாறு நடந்துகொண்டுள்ளது என்று ஒவ்வொருவரும் ஆராயவேண்டும். சாட்சிகள் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டதா? பொது ஊழியர் விசாரணை சட்டத்தின் கீழ் சாட்சிகளுக்கு பாதுகாப்பளிக்க உத்தரவாதம் அளிக்கப்பட்டதா? தன்னிடம் தரப்பட்ட குறிப்புகளைத் தவிர வேறு குறிப்புகளை நீதிபதி இராமசாமி கேட்டாரா? திரு. அன்பழகன் ஆற்றிய உரையின் முழுப் பகுதி அவரிடம் தரப்பட்டதா? அல்லது அவருடைய அறிக்கையிலிருந்து 4 குற்றச்சாட்டுக்கள் மட்டுமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனவா? ஒரு அதிகாரி தன்னைப்பற்றித் தெளிவுபடுத்திக் கொள்வதற்காகவே அரசாங்கம், சாதாரணமுறையைப் பின்பற்றாமல், அதிலிருந்து விலகி நூதன முறையில் விசாரணைக்கு ஏற்பாடு செய்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகத்திற்கு இடமில்லை.

பலருக்குக் கண்துடைப்பாகத் தோன்றக்கூடிய நிலையில், முறை தவறி அரசாங்கம் நடந்துகொண்டதுடன், பெயரளவிற்கு ஒரு விசாரணைக்கு ஒரு பெரிய நீதிமன்ற நீதிபதியையும் சம்பந்தப்படுத்துவதன் ஆபத்தைக் குறித்தும் ஆரம்பத்திலேயே அரசாங்கம் எச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும்.

நீதிபதிகளுக்கு உள்ள அன்றாட கடமைகளைத் தவிர, அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய பணிகள் யாவை?

நீதிக் கண்ணோட்டத்தில், பிரச்சினைகளை ஆராய்ந்து உண்மைகளை மதிப்பிட நீதிபதிகளின் உதவியை அரசாங்கம் நாடுவதிலும், மாறுபட்ட கருத்துக்களை பாரபட்சமின்றி ஆராய்வதிலும் தவறு இல்லை. ஆனால் நீதித்துறையை, சுதந்தரமாக முழு அளவில் உள்ள வழிகள் அனைத்தையும் பயன்படுத்த முடியாத நிலையில் ஒரு நீதிபதியை நியமிப்பது, நீதிமன்றத்தின் மூலம் நீதித்துறை விசாரணையுடன் சாதாரண விசாரணையையும் ஒன்றுபடுத்துவது, நீதிமன்றத்திற்கு உள்ள தனிச் சிறப்பையும் மதிப்பையும் குறைப்பதாகும்.

சமீபத்தில் எஸ். வரதாச்சாரியார் (சுப்ரீம் நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி), 'நீதிமன்ற நீதிபதிகளை, நிர்வாகத் துறையினர் ஏற்படுத்தும் நீதிமன்றங்களுக்குத் தலைமை தாங்கச் செய்வதின் காரணமாக, நிர்வாகத்தினருக்கு நீதிபதிகள் கட்டுப்படவேண்டியவர்களாகவும் சட்டபூர்வமான தீர்ப்பை முழு அளவில் வழங்க முடியாத நிலையிலும் உள்ளனர்' என்று எச்சரித்துள்ளார்.

உண்மைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, இந்த வழக்கில் சட்டமன்ற உறுப்பினர் சாட்டிய 5 குற்றச்சாட்டுக்களில் 4 குற்றச்சாட்டுக்கள் மட்டுமே நீதிபதியின் பரிசீலனைக்கு விடப்பட்டுள்ளது; அவை (1) விருந்துகளில் பங்கு கொள்வது; (2) இரயில் பெட்டியில் நடந்த சம்பவம்; (3) மத்திய அரசாங்கத்திடமிருந்து சென்னைக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் கடிதம்; (4) கட்டப்பட்ட வீடுகள் ஆகும்.

திரு. இராமசாமி, எல்லாவற்றையும்விட நான்காவது குற்றச்சாட்டாகக் கூறப்பட்டுள்ள, கட்டப்பட்ட வீடுகள் பற்றி மட்டுமே அதிக முக்கியத்துவம் காட்டியுள்ளார்; சாட்சிகளை அழைக்கவும், விசாரணைக் குறிப்புக்களைக் கண்டறிந்து உண்மையைக் கண்டுபிடிக்கவும் நீதிபதிக்கு அதிகாரமளிக்காததே அவருடைய முடிவுகளில் புலப்படும் தவறுகளுக்குக் காரணமாகும்.

திரு. அன்பழகன் கூறுவதாவது :—

"ஒரு போலீஸ் அதிகாரி, கடந்த நான்கு ஆண்டுகளில் சுமார் நான்கு வீடுகள் கட்டியுள்ளார்; அந்த நான்கு வீடுகளின் மதிப்பு ரூ. 4, 5 இலட்சம் இருக்கும் என்று மதிப்பிடப்படுகிறது."

ஆனால் அரசாங்கம் வெளியிட்டுள்ளதில், 'நீதிபதி, கட்டப்பட்டதாகக் கூறப்பட்ட நான்கு வீடுகளில், இரண்டு வீடுகள் கட்டப்பட்டதன் சம்பந்தமாக ஆராய்ந்துள்ளார்...இரண்டு வீடுகளுக்கும் மொத்தம் ரூ. 1,38,716—12—0 செலவிடப்பட்டுள்ளது' என்று உள்ளது.

நான்கு வீடுகளில் இரண்டு பெரியவை; ஒன்று நடுத்தரமானது; மற்றொன்று சாதாரணமானது—என்பதே உண்மை.

திரு. அன்பழகன், 'வீடுகள் கட்ட ரூ. 4, 5 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது' என்று பேசினார்; 'ரூ. 20 இலட்சம்' என்று அவர் கூறியதாக அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

தலைமைப் பொறியியல் அதிகாரி, கணக்கிடுபவர் ஆகிய இருவரின் உதவியுடன், திரு.

(4-ம் பக்கம் பார்க்க)

குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள்

திட்டமிட்டுக் குழந்தைகளைப் பெறுவது பற்றி அமைச்சர்

புதுடில்லி, செப். 14—

புதுடில்லியில் குடும்பத் திட்ட போர்டு கூடி, மாநிலங்களில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பற்றி ஆராய்ந்துள்ளது.

ஜூன் 14-ந்தேதி நடைபெற்ற தேசிய அபிவிருத்திக் குழுவிலும் சுகாதார அமைச்சர்கள் கூட்டத்திலும் குடும்பக்கட்டுப்பாடு திட்டம்விவாதிக்கப்பட்டு, திட்டத்தை மாநிலங்கள் தீவிரமாக அமுல் நடத்த வேண்டும் என்று முடிவு செய்திருந்தனர்.

சென்னை, மைசூர், அசாம், பீகார் மாநிலங்களில் குடும்பத் திட்ட நிறுவனங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளனவாம்.

சென்னை, இராஜஸ்தான் மாநிலங்களில் முழுநேர அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பஞ்சாப், டில்லியில் பகுதிநேர வேலை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

1957 ஆகஸ்டு இறுதிவரை 186 நிலையங்களை கிராமங்களிலும், 112 நிலையங்களை நகரங்களிலும், ஏற்படுத்த அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

1956—57-ல், இந்தத் திட்டத்திற்கு ரூ. 30 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது; இதுவரை ரூ. 9,12,000 செலவிடப்பட்டுள்ளதாம்.

இந்தத் தகவல்கள் டில்லியில் நடைபெற்ற குடும்பத் திட்ட போர்டு கூட்டத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

அந்தக் கூட்டத்தில் பேசுகையில் மத்திய சுகாதார, அமைச்சர் டி. பி. கர்மார்க்கர், குறிப்பிட்டதாவது:—

"குடும்பங்களின் தொகுப்பே நாடு; நாட்டின் நலனும், இன்ப நிலையும் குடும்பத்தில் துவங்குகிறது. எனவே, மனோபாவ—சுகாதார—பொருளாதார நிலைக்கேற்ப குடும்பத்தின் அளவை அறிவின் துணைகொண்டு சரி செய்துகொள்ள வேண்டும்.

"மக்கள் தொகை வேகமாகப் பெருகிவரும் இந்தக் காலத்தில், இயற்கை வளத்திற்கு ஏற்ப மக்களின் எண்ணிக்கையை நாம் ஒழுங்குபடுத்த வேண்டும். அதற்கு மாநிலங்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்த வேண்டும்.

"ஒரு குடும்பத்தில் மூன்று குழந்தைகள்தான் இருக்கவேண்டும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். எனவே, குடும்பக் கட்டுப்பாடு சம்பந்தமான எளிய முறைகளையும், மருத்துவ யோசனை அவசியமில்லாத முறைகளையும் விரிவாக மக்களிடையே பரப்ப வேண்டும்.''

தென்பகுதி இரயில்வேயின் நிர்வாக இலட்சணம்

இலட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்ட சம்பவம் பற்றித் தகவல்

புதுடில்லி, செப். 14—

பாரத புத்திரர்கள், மக்களின் வரிப்பணத்தைப் பாழடிக்கும் விதமும், வகையும் நாளும் வளர்வதை, மேலும் ஒரு நஷ்டம் எடுத்துரைக்கிறது.

தென்பிராந்திய இரயில்வேயில் ஏற்பட்டுள்ள பலநஷ்டங்களுள் ஒரு கண்டிராக்டருக்கு, ஒரே வேலைக்கு இருமுறை பணம் தந்ததால் ஏற்பட்ட ரூ. 1,06,825 நஷ்டம்தான் முக்கியமானதாம்!

ஒரே பொருளை வாகன்களில் ஏற்றவும், இறக்கவுமாக இருமுறை அந்தக் கண்ட்ராக்டருக்குப் பணம் தந்ததால் இந்த நஷ்டம் ஏற்பட்டதாம்.

இரயில்வேக்களின் 1957-ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கையில் இந்த நஷ்டம்பற்றிய தகவல் தரப்பட்டிருக்கிறது.

இதுவன்றியில், வசூலிக்காமல் விட்டது முதலிய வகைகளிலும் நஷ்டம் மிக ஏற்பட்டுள்ளது என்றும் அறிக்கை கூறுகிறது.

கிழக்கிந்திய இரயில்வேயில், இரயிலவே நிலங்களைப் பிறருக்குக் குத்தகைவிட்ட வகையில் மூன்று இரயில் நிலையங்களுக்கு மட்டும் வரவேண்டிய பாக்கி மட்டும் ரூ. 1,68,275 வரை இருக்கிறதாம்.

இந்தியாவில் சைக்கிள் உற்பத்தி

உபயோகிப்போர் தொகை அதிகரிக்கிறதாம்

சென்னை, செப். 14—

" இந்தியாவில் தயாரிக்கப் படும் சைகிள்களை மேல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவைகளுடன் ஒப்பிட்டு நோக்குகையில் சமமான தரம் உள்ளவையாகவே காணப்படுகின்றன; இருப்பினும், இந்திய சைக்கிள்களின்விலை அதிகமாக உள்ளது. இவ்விலையைக் குறைத்து எல்லோரும் சாதாரணமாகவாங்கக்கூடிய நிலையை ஏற்படுத்தினால்தான் உற்பத்திக்கு அதிக ஊக்கம் ஏற்படும்.

" இப்போது சைக்கிள் உபயோகிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துவருகிறது ; மேலும் சைக்கிள் உபயோகத்தை அதிகரிக்கச்செய்வது, சிறு தூரங்களில் இரயில், பஸ் போக்குவரத்தைக் கணிசமாகக் குறைக்கும்''

என்று, டி.ஐ. சைக்கிள் கம்பெனி நிர்வாகி என். கே. அய்யர் குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறியிருப்பதாவது:—

" இப்போது இந்தியாவில் 30 முதல் 40 இலட்சம் சைக்கிள்கள் உபயோகிக்கப்படுகின்றன. சுதந்திரத்திற்குப் பிறகு இந்தத் தொழிலுக்கு ஊக்கம் அதிகரித்தது. இந்தியாவில் மொத்தம் 66 உற்பத்தியாளர்களும், இறக்குமதி செய்யப்பட்ட உறுப்புக்களை இணைப்போரும் உள்ளனர். இந்தத் தொழிலுக்கு விலைக் காப்புக் குழு 1960 வரை பாதுகாப்பு அளித்துள்ளது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மொத்தம் 15 இலட்சம் சைக்கிள்கள் தயாரிக்க வரம்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது; இதில் 2½ இலட்சம் சைக்கிள்கள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் படும்.

" இப்போது சைக்கிள் உற்பத்தியில் 10 சதவிகித உறுப்புகள் மட்டுமே வெளிநாடுகளிலிருந்து வரவேண்டியுள்ளது; இவையும் இரு ஆண்டுகளில் இந்தியாவில் தயாரிக்கப்படும்."

'கையேந்தமாட்டோம்' என்றுவீராப்புப்பேசியவர்கள்

கடன் தேடப்போவதாக அறிவிப்பு

புதுடில்லி, செப். 14—

'உலக பாங்கிக் கூட்டங்களில் கலந்து கொள்வதுதான் நிதி மந்திரியின் அமெரிக்கப்பயணத்தின் முக்கிய வேலை என்றாலும் அன்னிய நாடுகளில் நமக்கு எவ்வளவு கடன்—கணிசமான கடன் கிடைக்கும் என்பதைக் கண்டறிந்து வருவதும் அவர் வேலைகளுள் ஒன்றுதான்''

என, பண்டித நேரு அறிவித்திருக்கிறார்.

'அவர், இந்தக் கடன் தேடும் வேலையில் ஈடுபடுவார்' என்று தான் நம்புவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

தேசிய அபிவிருத்திக் கவுன்சிலின், நிரந்தரக் கமிட்டிக் கூட்டத்தில் பேசுகையில்தான் அவர் இவ்வாறு கூறினாராம்.

பர்மாவிற்கு இந்தியாவிலிருந்து சைக்கிள்கள் ஏற்றுமதி

மக்கள் சபையில் கேள்வி — பதில்

புதுடில்லி, செப். 13—

இந்தியாவிலிருந்து பர்மாவிற்குக் கணிசமான அளவு சைக்கிள் ஏற்றுமதி செய்வதுபற்றிய திட்டம் ஒன்று பரிசீலனையிலிருக்கிறது.

பிரபல இந்திய உற்பத்தியாளர் ஒருவர், பர்மா சர்க்கார் அழைப்பின்பேரில் அங்கு சென்றிருக்கிறார்.

பர்மாவிற்கு இந்திய சைக்கிள் ஏற்றுமதிக்கு ஒட்டு மொத்தத் தடை எதும் இல்லை.

1957 சனவரி முதல் பர்மிய சர்க்கார், ஸ்டர்லிங் பிரதேசத்திலிருந்து-இந்தியா உட்பட எந்த நாட்டிலிருந்தும் சைக்கிள் இறக்குமதிக்கு அனுமதி வழங்கவில்லை.

பர்மா தனக்குத் தேவையான சைக்கிள்களை, யுத்த பிற்கால ஒப்பந்தங்களின்படி ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளுகிறது.

இந்தத் தகவல்களை, கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில், தொழில் மந்திரி எம். எம். ஷா தெரிவித்திருக்கிறார்.

விஞ்ஞானிகள், தொழில் நுட்பப் பயிற்சிபெற்றோர்

52,000 பேர் பதிவு செய்து கொண்டிருப்பதாகத் தகவல்

புதுடில்லி, செப். 11—

விஞ்ஞானம், மற்றும் தொழில் நுணுக்கப் பயிற்சிபெற்றோரின் தேசியப் பதிவுப் புத்தகம்பற்றிய விபரங்களை கல்வி மந்திரி ஆசாத், மாநிலங்கள் சபையில் தந்துள்ளார்.

'இப்புத்தகத்தில் இடம்பெற விஞ்ஞானம், அல்லது தொழில் நுட்பம் இவற்றில் ஒரு பட்டம் பெற்றிருக்க வேண்டும்; மருத்துவம் அல்லது எஞ்சினீயரிங் கல்வியில் ஒரு 'டிப்ளமோ' பட்டம் பெற்றிருக்க வேண்டும்' என்று அவர் கூறினர். இதன் படி, எஞ்சினீயர்கள், விஞ்ஞானிகள், மருத்துவர்கள், தொழில் நுட்பப் பயிற்சிபெற்றோர் ஆகியவர்கள், புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றனர்.

எஞ்சினீயர்கள் 19,000; விஞ்ஞானிகள், தொழில் நுட்பப் பயிற்சிபெற்றோர் 19,500; மருத்துவர்கள் 14,000-ஆக மொத்தம் பதிவானவர்கள் 52,500.

பதிவு செய்யப்படக் கோரியுள்ளவர்கள் எஞ்சினீயர்கள் 8,000; விஞ்ஞானிகள், தொழில் நுட்பப் பயிற்சிபெற்றோர் 3,000; மருத்துவர்கள் 7,000 என்றும் கூறப்பட்டுள்ளது.

★★★★★★-★★★★-★★★★★★★★-★★★★-★★★★★★★★★★★★★★★

வடாற்காடு மாவட்ட தி. மு. கழக மாநாடுகள்

திருவண்ணுமலையில்

சாமி அரங்கில் நடைபெறும்.

★

21-9-57: இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர்: சுவாமி அருணகிரிநாதர்

திறப்பாளர்: சி. வி. எம். அண்ணுமலை

★

22-9-57: தி. மு. க. 3-வது மாநாடு

தலைவர்: அன்பில்-தருமலிங்கம்

திறப்பாளர்: வெ. கிருட்டினமூர்த்தி M. A.

★

அண்ணு, நெடுஞ்செழியன்

அன்பழகன்	சம்பத்
அப்பாதுரை	சத்தியவாணிமுத்து
அரங்கண்ணல்	சி. பி. சிற்றரசு
ஆசைத்தம்பி	தாமரைச்செல்வன்
கே. ஆர். இராமசாமி	தில்லை-வில்லாளன்
எஸ். எஸ். இராசேந்திரன்	என். வி. நடராசன்
கருணுநிதி	டி. வி. நாராயணசாமி
கண்ணதாசன்	மதியழகன்
கோவிந்தசாமி	கி. மனேகரன்

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்து கோள்வர்.

★

எம். ஜி. ஆர். குழுவினர் நடிக்கும் இன்பக்கனவு, அட்வகேட் அமரன்

நாடகங்கள் இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

கட்டணம்: ரூ. 5, 3, 1.--பெண்கள்: அணு 8.

—வரவேற்புக் குழு

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

எழுப்பிய குரல் எதிரொலிக்கிறது

இலங்கையிலிருந்து துரத்தப்பட்ட தமிழர்களுக்கு வாழ்வு தர

நெல்லையில் இரண்டு ஆலைகள் அமையும்

கோவில்பட்டி, செப். 12—

இலங்கையிலிருந்து துரத்தப் பட்டுத் தாயகம் திரும்பியுள்ள தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென நாம் எழுப்பிய குரல், பலன்பெறத் துவங்கியுள்ளது.

அவர்களுக்காக, திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூரிலும், நாங்குனேரியிலுமாக இரண்டு நெசவாலைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மத்திய கனரகத் தொழில் மந்திரி எம். எம். ஷா, இந்தத் தகவலைத் தந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கூட்டுறவு முறையில் இந்த ஆலைகள் துவங்கப்படும் என்றும், ரூ. 100 பெறுமான பங்குதாரர்களாக—இலங்கையிலிருந்து திரும்பியுள்ளவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், ஆலைகள் நிறுவுவதற்கு ஆகும் செலவில் பாதியை டெல்லி சர்க்கார் ஏற்கும் என்றும் தெரியவருகிறது.

இத்துடன் பெரிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் இங்கு நிறுவப்படும் என்று தெரியவருகிறது.

ஐ. நா.-வில் சீனு!

நியூயார்க், செப். 14—

ஐ. நா. சபையில் செஞ்சீனவிற்கு இடம் தரவேண்டும் என்ற பிரச்சினையை, பொதுச்சபையில் இந்தியா கிளப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.

கட்டபொம்மன் நினைவுச் சிலை

பண்டித நேரு திறந்துவைப்பார்

எட்டயாபுரம், செப். 14—

இந்திய சுதந்தர வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றுள்ள வீர பாண்டிய கட்டபொம்மன் நினைவாக சென்னை மாநில நெல்லை மாவட்டத்தில் இரண்டு உருவச் சிலைகள் ஏற்படுத்தும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன.

பாளையம்கோட்டையில் ஒரு சிலையும், கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட கயத்தாற்றில் மற்றொரு சிலையும் வைக்கப்படும்.

இந்த இரண்டு சிலைகளையும், இந்தியப் பிரதமர் பண்டித நேரு திறந்துவைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரியவருகிறது.

இரயில்வேக் கட்டணங்கள்

புதுடில்லி, செப். 13—

[illegible]957 செப்: 15-ந் தேதி[illegible] வி[illegible] து இரயில்வேக் கட்டண[illegible] புதி[illegible] சாம்ச முறையில் கண[illegible] கிட்[illegible] ரிக்கப்படுமாம்.

பொ[illegible] கா[illegible] தொகையை [illegible] .வர்கள், புதிய காசுகளாலும் பெற்றுக் கொள்ளவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

விசாரணையே...

(2-ம் கலத்தின் தொடர்ச்சி)

இராமசாமி, இரண்டு விடுகளுக்குச் செலவிடப்பட்டுள்ள தொகையை மதிப்பிட்டுள்ளார். இந்த மதிப்பீடு சரியானதாக இருக்கலாம். ஆனால் எந்த இரண்டு விடுகளுக்கு ரூ. 1,38,716—12—0 செலவிடப்பட்டது என்பது தெரியவில்லை? மற்ற இரண்டு விடுகளைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை!

பதவி உயர்வுகளைப்பற்றியும், வேலை மாற்றங்கள் பற்றியும் கூறப்பட்ட குற்றச்சாட்டுக்களை ஏன் நீதிபதியின் விசாரணைக்கு விடப்படவில்லை என்பது புதிராக உள்ளது. ஏனென்றால், அரசாங்கத்திடமே இது சம்பந்தமான எல்லாக் குறிப்புகளும் இருக்கும்.

'ஐஸ் அவுஸ்' 'ஜாம்பஜார்' போலீஸ் நிலையங்களில் முறையே சப்-இன்ஸ்பெக்டர்களாகப் பணியாற்றிய திரு. நடராசன், திரு. இரங்கன் ஆகிய இருவரும் விழிப்புணர்ச்சியுடன் சூதாட்டத்தைத் தடுத்துவந்ததால், அவர்கள் மாற்றப்படும் நிலையும், பிறகு அரசாங்கம் அதில் தலையிட்டு உத்தரவு பிறப்பித்ததும் உண்மையல்லவா?

மற்ற வழக்குகளைப் போலவே பருத்திச் சூதாட்டத்தைப் பற்றிய வழக்கைத் திறமையுடன் நடத்தியதற்காக இன்ஸ்பெக்டர் துரைசாமியின் பதவியை உறுதிப்படுத்தாததோடு, அவரை வேறு இடத்திற்கு மாற்றியதும், பிறகு அரசாங்கம் தலையிட்டு அவருடைய பதவியை உறுதிப்படுத்தியும் இடமாற்றத்தை ரத்து செய்தும் உத்தரவிடவில்லையா?

பூக்கடை போலீஸ் நிலையத்தில் போலீஸ் நிதி கையாடல் பற்றி ஆராய்ந்த அதிகாரி மாற்றப்படவில்லையா?

இன்ஸ்பெக்டர் துரைசாமி முதலியார், உதவி கமிஷனர் முகமத்கான் ஆகியோரின் மாற்றம் ஐ. ஜி. எதிர்ப்புக்கிடையே போலீஸ் கமிஷனர், அரசாங்கத்தின் உதவியுடன் செய்யப்பட்டதாகக் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டைப் பற்றியும் விசாரணை நடத்தவேண்டும் என்று விடப்பட்டிருந்தால், பல அரிய உண்மைகள் வெளியாகி இருக்கும்.

மேலும் அதிகமாகச் சான்றுகள் கூறத் தேவையில்லை. கூறப்படும் புகார்களில் உண்மைகள் இல்லாமல் இருக்கலாம்; ஆனால் முழு விசாரணை, நிலைமையைச் சீர்படுத்தி இருக்கும்.

நீதிபதி திரு. இராமசாமி தனது விசாரணையின் முடிவில், இன்ஸ்பெக்டர்—ஜெனரல் பதவியிலிருந்து நிரந்தர ஓய்வு பெறுவதற்குமுன்னர், உடன் அனுமதிபெற்று ஓய்வெடுத்துக் கொள்வது நலம் என்று யோசனை கூறியுள்ளார். ஏன்? இந்த யோசனை கூறவேண்டியதற்கு உள்ள சூழ்நிலை என்ன? இவைகளுக்குத் தக்க விளக்கம் அளித்திருக்கலாம்; ஆனால், புரிந்து கொள்ள முடியாத இரகசியமாக விடப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்த விசாரணையின் முடிவுகளை ஏற்றுக் கோண்டிருப்பது மிகவும் ஆச்சரியத்திற்கிடமானது. முன்னை விட இப்போது நிலைமை மோசமாகிவிட்டது. விசாரணை நடத்த முன்வராமல் இருந்திருந்தால் நிலைமை வேறாக இருக்கும். ஆனால் தவறான பாதையில், த[illegible]ன முறையைக் கையாண்[illegible]பின் பற்றியதால், இப்[illegible] உருவாகியுள்ள நி[illegible] வேறு.

[illegible]ருவரும் தீவிரமாக ஆராய்ந்து கவனம் செலுத்தவேண்டியதாகும்.

★★★★★★★★★★★★★★★★★

மாவட்டத் தொடர்பு மாற்றம்

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் இதுவரை இயங்கிவந்த கீழ்க்கண்ட ஆறு கிளைக் கழகங்கள், சென்னை—செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகங்களின் நிர்வாகிகள் உடன்பாட்டோடும், சம்பந்தப்பட்ட கிளைக் கழகங்களுக்கு முன்னரே அறிவித்துள்ளபடியும், இன்று - 17—9—57-ம் நாள் முதல் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகப் பொறுப்புக்கு மாற்றப்படுகின்றன. இன்று முதற்கொண்டு கீழ்க்கண்ட ஆறு கிளைகளும் செங்கற்பட்டு மாவட்ட தி.மு. கழகத்திற்கு உட்பட்ட கிளைகளாகப் பணியாற்றும்.

மாற்றப்படும் கிளைகள் :—

1. திருவொற்றியூர் தி.மு.க. கிளை
2. புழல் ,,
3. மாதவரம் ,,
4. கொடுங்கையூர் ,,
5. செங்குன்றம் ,,
6. ஆலந்தூர் ,,

'அறிவகம்' சென்னை 17-9-57 — தலைமைக்கழகம், (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★

கழகக் கூட்டங்கள்

★

சென்னை 34-வதுவட்டம்
சேத்துப்பட்டு பிள்ளையார் கோவில் எதிரில்
(பச்சையப்பன் கல்லூரி அருகில்)
18—9—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: சி. ஆர். கோலப்பா
பேசுவோர்:
ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
எஸ். எஸ். தென்னரசு
வ. சங்கரநாராயணன்
தி. சு. கிள்ளிவளவன்

★

கிரனூர்:
(மதுரை மாவட்டம்)
பொதுச்சாவடியில்
18—9—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர்:
க. அன்பழகன் எம். எல். ஏ.

★

திட்டச்சேரி:
பந்தாட்டத் திடலில்
19—9—57 மாலை 6 மணிக்கு
பேசுபவர்: அண்ணு

★

மல்லசமுத்திரம்:
ஜவகர் திடலில்
19—9—57 மாலை 6-30 மணிக்கு
தலைவர்: எம். ஆர். ஆறுமுகம்
பேசுவோர்:
ஈ. ஆர். கிருஷ்ணன்
ப. கண்ணன்
சிற்றுளி-சுப்பிரமணியம்
இசை—நடன நிகழ்ச்சிகள்:
பி. கே. சுசீலா—டி. என். இரத்தினம் குழுவினர்

★

மணப்பாறை:
பழைய சந்தைத் திடலில்
19—9—57 மாலை 6½ மணிக்கு
பேசுவோர்:
க. அன்பழகன் எம்.எல்.ஏ.
எம். எஸ். மணி

★

கோவை 25-வது வட்டம்:
தாமஸ் வீதி என். எஸ். கே. திடலில்
19—9—57 இரவு 7 மணிக்கு
தலைவர்: தி. மணி
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
கோவை-செழியன்

இந்த விஷயத்தை அலட்சியப்படுத்திவிட்டு விடுவதற்கில்லை.

டில்லியின் மாற்றாந்தாய் மனப்போக்கு

திட்டங்களில் ஆந்திராவுக்கு அநீதி

மக்கள் சபையில் காங்கிரஸ் எம்.பி. குமுறல்

புதுடில்லி, செப். 13—

ஆந்திர மாநிலத்தை டில்லி சர்க்கார் புறக்கணிப்பதாகவும், அபிவிருத்தித் திட்டங்களில் ஓரவஞ்சனை புரிவதாகவும், ஆந்திரத்திடம் மாற்றாந்தாய் மனப்போக்கில் நடந்துகொள்வதாகவும் கண்டனக்குரல், மக்கள் சபையில் எழுந்திருக்கிறது.

டில்லியின் அக்கிரமத்திற்கு எதிராக இந்தக் குரல் எழுப்பியுள்ளவர், காங்கிரஸ்காரரான வி. ராமி ரெட்டி என்பவராவார்.

மக்கள் சபையில் இரண்டாம் திட்ட விவாதம் நடைபெற்ற போது பேசிய அவர் குறிப்பிட்டதாவது:—

"மத்திய சர்க்கார், ஆந்திர மக்களிடம் மாற்றாந்தாய் மனப்போக்குடன் நடந்துகொள்கிறது; இது கண்ட ஆந்திர மக்கள் மிகக் கோபமடைந்துள்ளனர்.

"திட்டத்தில் தொழில் அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள விதம், பிரதேசங்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுகளை வளர்க்கத்தான் உதவும். தொழில்கள் வேண்டும்—போக்குவரத்து வசதிகள் வேண்டும்—செகண்டரி கல்வி அபிவிருத்தி வேண்டும்—என்ற ஆந்திர மக்களின் கோரிக்கைகளுக்கு, டெல்லி சர்க்கார் செவிசாய்க்க மறுத்துவிட்டிருக்கிறது.

"உடனடியாக நிறைவேற்றப்படவேண்டிய சிறு நீர்ப்பாசனத் திட்டங்களுக்காகவேனும் சர்க்கார், ரூ. 10 கோடி வரை ஆந்திரத்திற்கு உடன் ஒதுக்கித்தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

வட ஆற்காடு மாவட்ட தி.மு.க.தோழர்களுக்கு

மாநாட்டு மலர் வெளியிடுவது சில அசந்தர்ப்பத்தால் நிறுத்தப்பட்டதென்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். பணம் அனுப்பியுள்ள தோழர்கள் மாநாட்டிற்கு நேரில் வரும்போது பணம் அனுப்பிய ரசீதை எடுத்துவந்தால் மாநாட்டு டிக்கட்டோ, அன்றி பணமோ மாநாட்டு அலுவலகத்தில் கொடுக்கப்படும். சிரமத்திற்கு மன்னிக்கவும்!

—வரவேற்புக் குழு

சென்னை கன்னியப்பநகர் திருவள்ளுவர் படிப்பகத் திறப்புவிழா

18—9—57 மாலை 6 மணிக்கு, கன்னியப்பநகரில் (கோட்டை இரும்பு வாராவதி அருகில்) தோழர் கா. அப்பாதுரையார் அவர்கள் தலைமையில் மேற்படி விழா நடைபெறும். தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், கண்ணதாசன், ஆர். எஸ். பாண்டியன், டி. கே. ஆறுமுகம், டி. ஆர். செயராமன் ஆகியோர் பேசுவர்.

முதுகுளத்தூர் வட்டத்தில் மேலும் படுகொலைகள்

நிலைமை நெருக்கடியாகிறது

சென்னை, செப். 17—

இராமநாதபுரம் முதுகுளத்தூர் வட்டாரத்தில், தேவர்களுக்கும்—தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இடையே கடந்த சில நாட்களாக ஏற்பட்டுவரும் கைகலப்புச் சம்பவங்களின் தொடர்ச்சியாக நேற்றும், இளஞ்சம்பூர் என்ற கிராமத்தில் கைகலப்பு நடைபெற்றிருக்கிறது.

இந்தச் சம்பவத்தில் ஒரு பெண் உட்பட ஆறு பேர்கள் கொலை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. கொல்லப்பட்டவர்களில் நால்வர் தேவர் என்றும், இருவர் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின்போது துப்பாக்கிகளும் உபயோகப்படுத்தப்பட்டதாகக் காயம்பட்டவர்கள் மூலம் காணப்பட்டிருப்பதாகவும், ஒன்பதுபேருக்குத் துப்பாக்கிக் குண்டுகளால் பலத்த காயம்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதன்பேரில், சட்டவிரோதமான ஆயுதங்களை எல்லாம் பறிமுதல் செய்வதில் போலீசார் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

கந்தகுமாரம் கிராமத்தில் திராவிடநாடு விடுதலை வாரப் பொதுக்கூட்டம்

19—9—57 மாலை 6 மணிக்கு, கந்தகுமாரம் கிராமத்தில், காட்டுமன்னார்குடி சத்தியவாணிமுத்து சொற்பயிற்சி மன்றச் சார்பில் 'திராவிடநாடு விடுதலை வாரவிழா'ப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். ஏ. லத்தீப் தலைமையில் நடைபெறும். தோழர் கோ. பாண்டியன் கொடியேற்றுவார்; தோழர்கள் பலர் பேசுவர்.

ஐந்தாண்டுத் திட்ட அக்கிரமம்:

கேரளத்திற்கு டில்லி இழைத்துள்ள அநீதி

மக்கள் தொகை அடிப்படையில் ரூ. 180 கோடி வேண்டும்

தனது சர்க்கார் போராடும் என்கிறார் நம்பூதிரி

நாகபுரி, செப். 15—

ஐந்தாண்டுத் திட்டத்தில் கேரள மாநிலத்திற்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாகவும், அந்த அநீதியைத் துடைப்பதற்காகத் தனது சர்க்கார் டில்லியுடன் கடும் போராட்டம் நடத்தும் என்றும் முதன் மந்திரி நம்பூதிரிபாட் கருத்தறிவித்திருக்கிறார்.

புதுடில்லி செல்லும் வழியில், இங்கு விமானக்கூடத்தில் அவரைச் சந்தித்த பத்திரிகையாளர்களிடத்தில் பேசுகையில் மேற்கண்ட கருத்தறிவித்த அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"மக்கள் தொகை அடிப்படையில் பார்த்தால், கேரள மாநிலத்திற்கு இரண்டாம் திட்டத்தில் ரூ. 170 முதல் ரூ. 180 கோடிவரை கிடைக்க வேண்டும்; ஆனால் ஒதுக்கப்பட்டிருப்பதோ ரூ. 87 கோடிதான்; இந்த அநீதிக்கு எதிராக நாங்கள் போராடுவோம்."

'கேரளத் திட்டம் மேலும் வெட்டப்படுமா?' என்று கேட்டபோது, நம்பூதிரிபாட், 'தேசியத் திட்டமே வெட்டப்படலாம் எனப் பேச்சுக் கிளம்பியுள்ளது; அப்படி நடைபெற்றால், மாநிலத் திட்டமும் வெட்டப்படவேண்டி வரலாம்; ஆனால் திட்டத்தில் எப்படி மாற்றங்கள் செய்யப்படவிருக்கின்றன; இதற்குத் திட்டக் குழுவிடம் உள்ள ஆலோசனைகள் என்ன என்பதைப் பொறுத்தாகும் இவ்விஷயம்' என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆமதாபாத்தில் துப்பாக்கிப் பிரயோகம்

ஆமதாபாத், செப். 16—

ஆமதாபாத் மாவட்டத்தில், தென்டு கிராமத்தில் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் இறந்துவிட்டார் என்றும், 12 பேருக்குக் காயம் ஏற்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

ஒருவரைக் கைது செய்ய போலீஸ் படை அந்தக் கிராமத்திற்குச் சென்றதாம்; கிராம மக்கள் கழிகள், ஈட்டிகளுடன் போலீசாரை எதிர்த்தனராம்.

போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாம்.

குறிப்பு:- பம்பாய் ஐ. ஜி. இனி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய நிலை இருக்காது என்றும், ஒரு புது முறை கண்டு பிடிக்கப்பட்டு 3,000 போலீசாருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது என்று கூறியதும் குறிப்பிடத்தக்கது.

அங்கேரி பற்றி ஐ. நா. சபை முடிவு

சென்ற ஆண்டு அங்கேரியில் நடைபெற்ற மக்கள் எழுச்சியை ஒடுக்க ரஷ்யா எடுத்துக்கொண்ட முயற்சியை ஐ. நா. பொது நிறுவனம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஐ. நா. பொதுச் சபைத் தலைவர் மாஸ்கோவுக்கும், புடாபெஸ்டுக்கும் செல்ல வேண்டும் என்றும், அங்கேரியில் அடக்குமுறையை நிறுத்துவதற்கான ஆக்கப்பணியில் ஈடுபட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடப்பாவில் இரயில் விபத்து

40 பேர் காயமுற்றனர்

கடப்பா, செப். 16—

ரெய்ச்சூரிலிருந்து சென்னை வந்துகொண்டிருந்த பாசஞ்சர் இரயில் ஒன்று கடப்பா இரயில் நிலையத்தில், கூட்ஸ் இரயிலுடன் மோதியதன் விளைவாக சுமார் 40 பேர் காயமுற்றிருக்கின்றனர்.

காயம்பட்டோரில் ஏழு பேர் படுகாயங்களுக்கு ஆளாகியிருந்தமையால், நகர மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

பிரயாணிகள் வண்டி கடப்பா இரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தது; கடப்பாவிலிருந்து முன்னும் பின்னுமாக இரட்டை எஞ்சின்களுடன் புறப்பட்டுச் சென்ற கூட்ஸ் வண்டி, திடீரென பின்னால் வேகமாக வந்துவந்து பிரயாணிகள் வண்டியின் எஞ்சினில் மோதியிருக்கின்றது; இது தான் விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழக[illegible] தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., [illegible] அச்சகத்தில் அச்சிட்டு, (2[illegible] தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.